# 8 எழுத்துருவின் முற்கட்டமைப்புக்கு உத்திகளை அறிதல்

**இலக்கு**

எழுதுதற்கு முன்னர் மாணவர்கள் கருத்துகளை இயைபுள்ள விதத்தில் மேம்படுத்தவும் வரிசைப்படுத்தவும் துணைசெய்தல் (மொழித் தேவைகளால் இன்னும் வில்லங்கமின்றி). ஆசிரியர் செயன்முறையினை வகுப்புக்குக் கூறி கவனமாக விளக்குதல் பெருமளவு இன்றியமையாததாகும்..

## கருத்துகளை அறியவும் வரிசைப்படுத்தவும் மூன்று செயன்முறைகள்:

---

### 1. விளக்கப்படமுறை

2 - 9 ஆந் தரம் | 20 மணித்துளிகள்

**கருவிகள்:**
A3 அல்லது A4 தாள்

இந்நெறிமுறை கற்பனையுடன் இயைபுற்ற எழுத்துருக்களுக்கான கருத்துகளை அறியவிரும்பும் முயற்சிக்கு நன்கு துணை செய்யும். எ.கா. ஒரு கதைக்கு அல்லது கற்பனை எழுத்துருவுக்கு. ஆசிரியர் மேல் உள்ளதுபோல் ஓர் எடுத்துக்காட்டினைப் பின்வரும் அறிவுறுத்தல்களுடன் கொடுக்கிறார்: A4 அல்லது A3 தாள் ஒன்றினைப் பக்கவாட்டாக எடுக்கவும். நடுப்பக்கத்தில் நீர் எழுதவுள்ள தலைப்பு அல்லது பொருளினை எழுதுக. தலைப்பினைச் சுற்றி வட்டமிடுக. பின்னர் அதுதொடர்பான சொற்களை சுற்றி எழுதி அதனையும் வட்டமிடுக. மறுபடியும் எழுதிய சொற்களுடன் தொடர்பான சொற்களை எழுதி அதனையும் வட்டமிடுக. பின்னர் கோட்டினால் இணைக்கவும். முதல்மொழியில் கொத்தினைச் செய்வது கடுமை வாய்ந்ததாக இருப்பின், பள்ளி மொழியினைப் பயன்படுத்தலாம். 5 மணித்துளிகளின் பின் உங்கள் கருத்துத் தொகுப்பினைப் பார்த்து உங்கள் எழுத்துருவில் பயன்படுத்தப் போகின்றவற்றை நிறத்திலும் எண்ணிலும் அவை என்ன ஒழுங்கில் பயன்படுத்தப்படும் என்பதைக் குறிக்குக.

